# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2018 யூலை மாதம் 17 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

I. தவிசாளரின் அறிவிப்புக்கள்

II. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

III. அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்

IV. செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்

V. மனுக்கள்

VI. கேள்விகள் / இடைக்கால கேள்விகள்

**01.** **கௌரவ நிரோஷா அத்துகோரல உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2018.07.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/31)**

அ. 2017 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு கல்வி வலயத்தில் க.பொ.த (சா/த) பரீட்சைக்கு தோற்றிய பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அதில் மாகாணப் பாடசாலைக்குரிய பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

இ. 2017 ஆம் ஆண்டின் நீர்கொழும்பு கல்வி வலயத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. 2016 ஆம் ஆண்டிற்கு இணைந்த வகையில் 2017 ஆம் ஆண்டில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்யதாத பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

உ. 2017 ஆம் ஆண்டில் நீர்கொழும்பு கல்வி வலயத்தில் க.பொ.த (சா/த) பரீட்சையில் கணித பாடத்தில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஊ. 2016 ஆம் ஆண்டை விட இவ் வருடத்தில் கணித பாடத்தில் சித்தியெய்திய மற்றும் சித்தியெய்தாத பிள்ளைகளின் எண்ணிக்கை எவ்வளவு ?

**02.** **கௌரவ எம்.எஸ்.எம். பைரூஸ் உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2018.07.03 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :** **(Îæ/vi (1)18/32)**

அ. ரமசான் நோன்பு மாதத்தில் முஸ்லிம் பள்ளிவாசல்களுக்கு பேரீச்சம்பழம் பகிர்ந்தளிப்பது உங்களது அமைச்சின் மத்தியஸ்த்தில் நிகழ்கின்றது ?

ஆ. அந்த செயற்றிட்டம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது ?

இ. பேரீச்சம்பழத்தை பகிர்ந்தளிப்பதற்காக வருடாந்தம் ஒதுக்கப்பட்ட நிதியின் அளவு மற்றும் பகிர்ந்தளிக்கப்பட்ட பேரீச்சம்பழத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு ?

ஈ. அந்தந்த வருடங்களில் பேரீச்சம்பழம் பகிர்ந்தளித்த பள்ளிவாசல்கள் மற்றும் அவற்றுக்கு வழங்கிய பேரீட்சம் பழத்தின் அளவு வெவ்வேறாக எவ்வளவு ?

உ. பேரீச்சம்பழத்தை பகிர்ந்தளிக்கும் போது எம் முறையின் கீழ் முஸ்லிம் பள்ளிவாசல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன ?

ஊ. அச் செயற்றிட்டத்திற்காக பேரீச்சம்பழம் கொள்வனவு செய்யப்படும் முறை மற்றும் அந்தந்த வருடங்களில் கொள்வனவு செய்யப்பட்ட தாபனங்கள் யாவை ?

எ. பேரீச்சம்பழங்கள் உரிய முறையில் குறித்த பள்ளிவாசல்களுக்கு கிடைத்தன என்பதனை உறுதி செய்யும் மீள் பார்வை நடவடிக்கை யாது ?

**03.** **கௌரவ உபாலி கொடிகார உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)18/35)**

அ. போக்குவரத்து அதிகார சபையில் MM 1-1 பிரதேச முகாமையாளர் பதவிகளில் எத்தனை வெற்றிடங்கள் காணப்படுகின்றன ? அவ் வெற்றிடங்கள் எவ் இடங்களில் காணப்படுகின்றன ?

ஆ. அவ் வெற்றிடங்கள் எவ்வளவு காலம் தொடக்கம் காணப்படுகின்றன ?

இ. தற்போது அவ் வெற்றிடங்களுக்கு என்ன நிகழ்ந்துள்ளது ?

ஈ. போக்குவரத்து அதிகார சபையில் MM 1-1 பிரதேச முகாமையாளர் பதவிகளில் பதில் கடமையாற்றும் பதவிகள் எத்தனை காணப்படுகின்றன ?

உ. அப் பதவிகளில் எவ்வாறு நியமனங்கள் வழங்கப்படும் ?

ஊ. அப் பதவிகள் கௌரவ ஆளுநரினால் இடைநிறுத்தப்பட்டுள்ளன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

எ. கௌரவ ஆளுநரினால் புதிதாக நேர்முகப் பரீட்சையை நடாத்தி நியமனங்களை வழங்க ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ? அதற்கிணங்க அவ் ஆலோசனையை ஏன் கடைபிடிக்கவில்லை ?

ஏ. இதற்கு முன் நடந்த நேர்முகப் பரீட்சை சட்டத்திற்கு முரணாகிய படியால் ஒரு நபருக்கு மட்டும் அதாவது ஹோமாகம பிரதேச முகாமையாளர் திரு. சானக அவர்களுக்கு மட்டும் அப் பதவி எப்படி வழங்கப்பட்டது ?

ஐ. கௌரவ ஆளுநரின் கட்டளையின் கீழ் அப் பதவியை என்ன காரணத்திற்காக நிறுத்தவில்லை ?

**04.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு:** **(Ïæ/vi (1)18/36)**

அ. 1999 தொடக்கம் 2015 வரையிலான காலத்திற்கு உரியதாக மஹரகமை நகர சபையின் இருப்பு நிலுவை மற்றும் பௌதீக நிலுவைகளுக்கு இடையே வேறுபாடு மற்றும் நிலையான சொத்து கணக்கு நிலுவை மற்றும் பௌதீக ரீதியில் காணப்படும் சொத்துக்களின் பெறுமதிக்கு இடையிலான வேறுபாடு தொடர்பாக விசாரணை ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. விசாரணை அறிக்கையில் (i) இலக்கம் 06 இன் கீழேயான கட்டளைகளின் 6.1 (iii) இற்கு இணங்க புத்தகங்களில் கணக்குப் பதிவதை கைவிடுவதற்கு தீர்மானித்துள்ள உத்தியோகத்தர் ஊழல், மோசடி, முறைகேடு நடவடிக்கைகளுக்கு இடம் வழங்கும் நோக்கில் அம் முடிவினை எடுத்துள்ளார் எனவும்,

(ii) 6.1 (ix) இற்கு இணங்க அக் காலத்தினுள் பதவியை வகித்த தவிசாளர் நீண்ட காலம் அது தொடர்பாக கவனம் செலுத்தாது இருந்து தமது பொறுப்பினை தட்டிக் கழித்துள்ளார் எனவும், குறிப்பிடப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

இ. அறிந்து கொள்ளக் கூடிய கடித ஆவணங்களுக்கு இணங்க ரூபா. 400 இலட்சம் நிதி ஊழல் மோசடியினால் மஹரகமை மக்களுக்கு இல்லாமல் போய் உள்ளது எனவும், நன்கொடை மற்றும் பரிசாக கிடைக்கப் பெற்றுள்ள சொத்துக்களின் பெறுமதிகளுக்கு இணங்க இந்த முறைகேட்டின் நிதி ரீதியான பெறுமதி மேலும் அதிகம் என்பதனையும் ஏற்றுக் கொள்கின்றீர்களா ?

ஈ. உள்ளூராட்சித் தாபனங்களை மேற்பார்வை செய்வதற்குரிய அதிகாரத்திற்கு இணங்க இது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**05.** **கௌரவ சுசில் கிந்தெல்பிடிய உறுப்பினரினால் கௌரவ வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(Ïæ/vi (1)18/37)**

அ. நீங்கள் போக்குவரத்து விடயப் பொறுப்பு அமைச்சராக நியமனம் பெற்ற பின்னர் பயணிகள் போக்குவரத்து அதிகார சபைக்கு எவ்வளவு எண்ணிக்கையில் ஊழியர்கள் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் ?

ஆ. அவ்வாறு மேற்கொள்ளப்பட்ட ஆட்சேர்ப்புக்கள் எப் பதவிகளுக்காக ?

இ. உரிய நியமனங்கள் (நிரந்தரம், தற்காலிகம், ஒப்பந்தம், பதிலீடு அல்லது பிற) எதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது ?

ஈ. ஆட்சேர்க்கப்பட்ட ஒழுங்கு விதியினை தெளிவுபடுத்த இயலுமா ?

உ. சிலர் உரிய ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு இணங்க தகைமைகளை பூர்த்தி செய்யாதவர்கள் என்பதனை ஏற்றுக் கொள்கின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

## VII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## VIII. சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான தகவல்கள்

## IX. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும் / சிறப்புரிமை மீறப்பட்டது தொடர்பான பதில்கள்

## X. சபை நடவடிக்கை

**<u>கௌரவ சபை நடவடிக்கை தொடர்பான அமைச்சரினால் சமர்ப்பிக்கப்படுவதற்கு</u> :**

**பிரேரணை :**

இன்றைய தினம் (2018.07.17) திகதி சபை நிகழ்ச்சி நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள பொது நடவடிக்கை விடயத்தின் செயற்பாடுகளுக்கு ஒழுங்கு விதி இலக்கம் 39(1), 39(3), 52(5) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளினால் எந்தவொரு தடை ஒன்றும் ஏற்படக் கூடாது எனக் கருதி செயற்பட வேண்டும்."

## XI. பொது நடவடிக்கை

**01. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

**<u>2018 ஆம் ஆண்டின் குறை நிரப்பு மதிப்பீடு - 02</u>**

2018 ஆம் ஆண்டிற்காக மேல் மாகாண கல்வி அமைச்சுக்கு கீழே காணப்படும் தேவைகளுக்காக அதாவது,

- மாகாணத்தினுள் வேலைகள் நிறைவு செய்யப்படாத பாடசாலைக் கட்டடங்களின் வேலைகளை நிறைவு செய்வதற்கு, அத்தியாவசிய பாடசாலைகளின் கட்டடங்களை நிர்மாணிப்பது உள்ளிட்ட ஏனைய கட்டுமானம் மற்றும் கல்வித் துறையின் தேவைகளுக்காக ஏற்பாட்டினை ஒதுக்குதல், எழுநூற்றி ஐம்பது மில்லியன் (ரூபா 750 மில்லியன்)

ஆகிய தேவைகளுக்காக 2018 ஆம் ஆண்டிற்கு குறைநிரப்பு மதிப்பீடு ஒன்றை சமர்ப்பிக்க வேண்டியுள்ள படியாலும் அதற்குத் தேவையான ரூபா எழுநூற்றி ஐம்பது மில்லியன் (ரூ.750,000,000/-) ஆகிய மொத்த ஏற்பாட்டினை தற்போது திறைசேரி ரிப்போ இன் கீழ் முதலீடு செய்யப்பட்டுள்ள நிதியில் ஒரு பகுதியினைப் பெற்றுக் கொள்வதன் ஊடாக தீர்ப்பதற்காக எதிர்பார்த்து தயாரிக்கப்பட்டுள்ள 2018 குறைநிரப்பு மதிப்பீடு - 02 இனை அங்கீகரிக்க வேண்டும்.

**02. கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சர் (மே.மா)**

**பிரேரணை :**

<u>2018 குறைநிரப்பு மதிப்பீடு - 02 க்கு உரிய ஒதுக்கீட்டு நியதிச் சட்டம்</u>

2018 ஆம் ஆண்டிற்காக குறைநிரப்பு மதிப்பீடு 02 தேவையான ரூபா எழுநூற்றி ஐம்பது மில்லியன் (ரூ.750,000,000/-) ஆகிய நிதியை மேல் மாகாண சபை நிதியத்தில் இருந்து செலுத்துவதற்கும் இலங்கை அரசாங்கத்தினால் மானியமாகவோ வேறு முறையில் கிடைக்கப் பெறும் நிதியினை அந்த நிதியத்திற்குப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரம் வழங்கும் 2018 ஆம் ஆண்டின் ..... ஆம் இலக்க ஒதுக்கீட்டு நியதிச் சட்டத்தினை அங்கீகரிக்க வேண்டும்.

## XII. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ சுனில் வடகல அவர்கள்

புளூமென்டல் குப்பை மேடு, மீதொடுமுல்லை குப்பை மேடு, கரதியான குப்பை மேடு போன்ற குப்பை மேடுகள் கவிழ்ந்ததன் காரணமாக மனித உயிர்கள் மற்றும் முழு சுற்றாடலும் அழிவுக்கு உட்பட்ட வேளையில் அதற்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய அலுவலகர்கள், தாபனங்கள் அவற்றை தடுப்பதற்கு நிரந்தர தீர்வினை வழங்குவதாகக் குறிப்பிட்டு பல்வேறுபட்ட பிரசாரங்களை மேற்கொண்டனர். மீதொடுமுல்லை குப்பமேடு, புளூமென்டல் குப்பை மேடு ஆகியவற்றை நகர பூங்காக்களாக மாற்றுவதாக அறிவிக்கப்பட்டது. தற்போது அந்த குப்பை மேடுகள் அவ்வாறே காணப்படுகின்றன. நீண்ட கால வேலைத் திட்டம் ஒன்று இல்லை. களனி கங்கை ஆண்டு முழுவதும் பெருக்கெடுக்கும் போது அதில் மூழ்கும் மக்களுக்கு அச் சந்தர்ப்பத்தில் உணவுப் பொதி, உலர் உணவுப் பொருட்களை வழங்கி தற்காலிக நடவடிக்கை எடுக்கப்படுவதுடன், இவ் எல்லா விபத்துக்களுக்கும் அந்தந்த விடயங்களுக்குரிய அமைச்சு தலையிட்டு நீண்ட கால தீர்வொன்றினை முன்வைக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை பிரேரணை தெரிவிக்கின்றது. **(பி/vi(1)18/04)**

### 02. கௌரவ உபாலி கொடிகார அவர்கள்

மேல் மாகாணத்தின் கல்வி வலய மட்டத்தில் அமைந்துள்ள விஷேடதேவையுள்ள பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலைகளின் எண்ணிக்கை 182 ஆகுவதுடன், அப் பாடசாலைகளில் கல்வி கற்கும் விஷேட தேவைகள் உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை 3713 ஆகும்.

அரச பாடசாலைகளில் கல்வி கற்கும் சாதாரண பிள்ளைகளுக்கு ஐந்தாம் தர புலமை பரிசில் பரீட்சையின் பெறுபேற்றின் கீழ் புலமைப் பரிசில் உதவி நிதி ஒன்று, பல்கலைக்கழக மாணவர்களுக்கு மஹபொல புலமைப்பரிசில் மூலம் புலமைப் பரிசில் நிதி ஒன்று வழங்கும் முறை ஒன்று காணப்பட்ட போதும் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்கு புலமைப்பரிசில் உதவி ஒன்றினை பெற்றுக் கொடுக்கும் முறை ஒன்று இல்லை.

மேல் மாகாணத்தின் விஷேட தேவையுள்ள பிள்ளைகளுக்காக, கல்வியினை பெற்றுக் கொடுக்கும் பாடசாலைகளில் கல்வி கற்கும் பிள்ளைகளை ஊக்கப்படுத்துவதற்காக அப் பிள்ளைகளுக்கு கல்வி நடவடிக்கைகளுக்காக ஏதாவது படி ஒன்று அல்லது உதவி நிதி ஒன்றினை வழங்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகின்றது. **(பி/vi(1)18/05)**

## XIII. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

**2018.07.04** ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.